நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.348/2025**

**P.W. 5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராதாமணி |
| தந்தை / கணவர் பெயர் | : | ராமசாமி |
| கிராமம் | : | இச்சிமரத்தோட்டம், கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | 64 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 12–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.37PM)

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இன்று விடுமுறையில் உள்ளதாலும் சாட்சி ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும் இந்த நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்கிறது.**

1. நான் தற்போது கொளத்தூர் கிராமம் இச்சிமரத்தோட்டத்தில் குடியிருந்து

வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு மாலை 5.00 மணி சுமாருக்கு அ.சா.2 சின்னராஜ் தோட்டத்திற்கு மண்வெட்டி வாங்குவதற்காக நான் அங்கு சென்று இருந்தேன். அங்கு ஆஜர் எதிரி குஞ்சப்பனும், அ.சா2 சின்னராசும் வாய் தகராறு செய்து கொண்டிருந்தனர்.

2. குஞ்சப்பன் அங்கு இருந்த கைஅளவு கற்களை எடுத்து தடத்தில் போட்டு கொண்டிருந்தார். நான் அது பற்றி கேட்டபோது உங்களுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் போங்கள் என்று சொன்னார். நான் அதன் பிறகு மண்வெட்டியை வாங்கி கொண்டு வந்துவிட்டேன். ஒரு நாள் கழித்து போலீசார் அங்கு வரும்போது சம்பவத்தை பற்றி எனக்கு தெரியும் என்று அங்கு அ.சா2 சின்னராஜ் என்னை வரச்சொன்னார்.

3. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு கொண்டு சம்பவத்தை பற்றி என்னிடம் விசாரித்து கொண்டிருந்தார்கள். சம்பவத்தை பார்த்தற்கு என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள் . நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொபப்பம் மட்டும் என்னுடையதுதான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சின்னராஜ் தோட்டத்தில் வைத்துதான் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து வாங்கினார்கள். வரைபடம் எல்லாம் வைத்திருந்தார்கள். அந்த வரைபடத்தில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. அப்போது பக்கத்து தோட்டக்காரர் கோபாலகிருஷ்ணன் என்பவரும் அங்கு இருந்தார்.

2. நான் கையெழுத்து போட்டு விட்டு வந்துவிட்டேன். கோபாலகிருஷ்ணன் கையெழுத்து போட்டாரா என்று எனக்கு தெரியாது. ஆஜர்எதிரி குஞ்சப்பனுக்கும், அ.சா2 சின்னராசுக்கும் கடந்த 10 வருடங்களாக தடம் சம்பந்தபட்ட பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் நான் சொன்ன இடத்திற்கு நான் வரவில்லை என்றாலும், அந்த தேதியில் நான் மண்வெட்டி வாங்குவதற்கு வந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

3. அ.சா2 சின்னராஜ் முழுவதுமாக மாந்தோப்புதான் வைத்துள்ளார் என்றால் பாதி காடு அளவுகளுக்கு வைத்துள்ளார். எனது காடு சின்னராஜ் காட்டிற்கு ஒட்டி தான் உள்ளது. இன்று அ.சா2 சின்னராஜ்தான் சாட்சி சொல்ல அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் அ.சா2 சின்னராசுக்கு ஆதரவாக பக்கத்து காட்டுகாரர் என்ற முறையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு மனைவி மக்கள் யாரும் இல்லாத காரணத்தினால் அவரது சொத்துக்ளை அபகரிக்கும் பொருட்டு அ.சா2 சின்னராஜ் நான் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்என்றாலும் சரியல்ல.

4. நான் முதல் விசாரணையில் காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரணான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் காவல் நிலையத்தில் வைத்துதான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.58PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**